செய்தி வெளியீடு 249 நாள் 20.3.2010

அகிய இந்திய அளவில் நடைபெற்ற 56 வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா 19.3.2010 அன்று புதுதில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் மேதகு இந்திய குடியரசு தலைவர் திருமதி பிரதிபா தேவி சிங் பாட்டில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் தேசிய அளவில் தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படக்கல்லூரி மாணவர் திரு.முரளி மனோகர் இயக்கிய ''கர்ண மோட்சம் '' என்ற 2008 க்கான குறும்படத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. தயாரிப்பாளர் சார்பில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.சி.காமராஜ், இ .ஆ. ப., அவர்கள், குறும்பட இயக்குநர் சார்பில் சிறந்த கலை மற்றும் கலாச்சரத்திற்கான விருதினையும் ரொக்கப் பரிசு ரூபாய் 50 ஆயிரத்திற்கான காசோலையினையும் பெற்றுக்கொண்டனர்.

**வெளியீடு**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை 9**